**ஜனவரி – 26**

# TNPSC துளிகள்

- ரஞ்சி டிராபி கிரிக்கெட்டில் தனித்தனிப் பருவங்களில் 1,000 ஓட்டங்களை எடுத்த ஒரே வீரர் என்ற சாதனையை மூத்த கிரிக்கெட் வீரரான வாசிம் ஜாபர் படைத்துள்ளார். இவர் முதல் வகுப்புப் போட்டியில் 1996-1997 காலத்தில் அறிமுகமானார்.
    - மேலும் இவர் ரஞ்சி டிராபி கிரிக்கெட் போட்டியில் அதிக முறை சிறந்த ஆட்டக்காரர் விருதினையும் பெற்றுள்ளார்.
- அனைவருக்குமான அடிப்படை வருமான திட்டத்திற்குப் பதிலாக விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு அவர்களுக்கு நிபந்தனையற்ற பணப் பரிமாற்றத் திட்டத்தினை தேர்வு செய்யுமாறு அரசாங்கத்திற்கு SBI Ecowrap (SBI Ecowrap) அறிக்கையானது பரிந்துரை செய்துள்ளது.
- உலகளாவிய சரக்குப் பெட்டகங்களை கையாளும் முன்னணி 100 துறைமுகங்கள் அறிக்கையின் முதல் 30 துறைமுகங்களில் இந்தியாவிலிருந்து இடம்பிடித்துள்ள ஒரே துறைமுகமாக இந்தியாவின் முன்னணித் துறைமுகமான ஜவஹர்லால் நேரு துறைமுக அமைப்பு (Jawaharlal Nehru Port Trust-JNPT) ஆகியுள்ளது.
    - இதன் முந்தைய தரவரிசைகளுடன் ஒப்பிடுகையில் JNPT ஆனது 5 இடங்கள் முன்னேறி 28வது இடத்தைப் பிடித்துள்ளது.


# தேசியச் செய்திகள்

## இம்பெக்ஸ் 2018-19


- இந்தியா மியான்மர் நாடுகளுக்கிடையேயான இருதரப்பு இராணுவப் பயிற்சியான இம்பெக்ஸ் 2018-19 என்பதின் இரண்டாவது பதிப்பானது ஹரியானாவில் உள்ள சாந்தி மந்திர் இராணுவ நிலையத்தில் நடைபெற்றது.
- இந்த கூட்டுப் பயிற்சியின் நோக்கமானது ஐ.நா.வின் கீழ் அமைதிப்படை நடவடிக்கைகளில் பங்கு பெறுவதற்காக மியான்மர் இராணுவத்தினரை பயிற்றுவிப்பதாகும்.
- இந்திய ராணுவமானது ஐ.நா. அமைப்பின் நடவடிக்கைகளில் பணியாற்றுவதில் அதிக அனுபவங்களைக் கொண்டது. மேலும் உலகளவிலான அமைப்பில் அதிக அளவில் வீரர்களை அளிக்கும் நாடாகவும் இந்தியா உள்ளது.

## 35-A சரத்திற்கு எதிரான வழக்கு ஏற்பதற்கான முடிவு

- உச்சநீதிமன்றமானது 35-A சரத்தை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்குகளை ஏற்பது குறித்து அதன் உட்குழு முடிவெடுக்கும் என அறிவித்துள்ளது.




- சரத்து 35-A மற்றும் சரத்து 370 ஆகியவற்றின் அரசியலமைப்பு செல்லுபடியாகும் தன்மையை எதிர்த்து We The Citizens எனும் NGO-ஆனது மனுத் தாக்கல் செய்துள்ளது.
- உட்குழு முடிவு என்பது முறையான நீதிமன்ற நடவடிக்கைகள் இல்லாமல் நீதிபதிகளின் உட்குழுவிலிருந்து முடிவெடுத்து ஆணைகளை வழங்கும் நடைமுறையாகும்.




## கடல் கண்காணிப்புப் பயிற்சி (SEA VIGIL)

- 26/11 தாக்குதல் நடந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியக் கடற்படையானது அதன் மிகப்பெரிய கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியான இந்தியக் கடலோரப் பகுதிகளுக்கான கடல் கண்காணிப்புப் பயிற்சியைத் தொடங்கியுள்ளது.



- இந்தியக் கடற்படையானது முன்னதாக மாநிலங்கள் அளவில் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சிகளை ஆண்டுக்கு இருமுறை மேற்கொண்டது.
- ஆனால் முதன்முறையாக அனைத்துக் கடலோர மாநிலங்கள், தீவு பிரதேசங்கள் மற்றும் அனைத்து மத்திய மற்றும் மாநில அமைப்புகளும் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
- இது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தியக் கடற்படையால் நடத்தப்படும் முக்கிய போர்க்கள நிலையிலான முப்படைப் பயிற்சியான ட்ரோபெக்ஸ் (TROPEX) அளவிற்கு உருவாக்கப்படுகிறது.
- 26/11 அன்று மும்பையில் நடைபெற்ற தாக்குதலுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் செயல்திறனை முழுமையான அளவில் மதிப்பிடுவதே இதன் நோக்கமாகும்.

## பிரவாசி பாரதிய சம்மன் விருதுகள் 2019

- குடியரசுத் தலைவர் 2019 ஆம் ஆண்டிற்கான பிரவாசி பாரதிய சம்மன் விருதுகளை 30 பேருக்கு வழங்கினார்.
- இந்த விருதுகளானது வாரணாசியில் நடைபெற்ற பிரவாசி பாரதிய சம்மன் நிகழ்வில் வழங்கப்பட்டன.
- இந்த விருதானது வெளிநாட்டு இந்தியர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதாகும்.
- இந்த மதிப்புமிக்க விருதுகளை,
    - கீதா கோபிநாத் – IMF-ன் தலைமை பொருளாதார நிபுணர்.
    - சந்திர சேகர் மிஸ்ரா – மூத்த அறிவியலாளர் (2015 ஆம் ஆண்டு இந்திய அமெரிக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உறவிற்கு கருவியாக செயல்பட்டவர்)
    - கிரிஷ் பந்த் – ஐக்கிய அரசு அமீரகத்தில் நீரில் மூழ்கிய பல இந்திய கடல் மாலுமிகளை மீட்பதில் கருவியாக செயல்பட்ட சமூக நலப்பணியாளர்)

    ஆகியோர் பெற்றுள்ளனர்.
- 2003 லிருந்து 2015 வரை ஒவ்வொரு ஆண்டும் பிரவாசி பாரதிய சம்மன் மாநாட்டில் 15 விருதுகள் வழங்கப்பட்டன.
- 2015லிருந்து இந்த மாநாடானது ஈராண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. மேலும் விருதுகளின் எண்ணிக்கை 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.


# சர்வதேசச் செய்திகள்

## ஆக்ஸ்பாம் வருடாந்திர செல்வ நிலை ஆய்வறிக்கை - 2019

- 2019 ஆண்டிற்கான ஆக்ஸ்பாம் வருடாந்திர செல்வ நிலை ஆய்வறிக்கையானது டாவோஸில் உலகப் பொருளாதார மன்றத்தின் துவக்கத்தை குறிக்கும் பொருட்டு வெளியிடப்பட்டுள்ளது.
- உலகில் வறுமையில் உள்ளவர்களில் பாதியளவுத் தொகையான 3.8 பில்லியன்

மக்களின் சொத்துக்களுக்கு சமமான சொத்துக்களை 26 செல்வந்தர்கள் கொண்டுள்ளனர்.

- ❖ இந்த செல்வந்தர்கள் 2018-ல் மிக பணக்காரர்களாக உயர்ந்தும் ஏழைகள் மிகவும் ஏழைகளாகவும் மாறியுள்ளனர். மேலும் இந்த மிகப்பெரிய இடைவெளியானது வறுமைக்கு எதிரான போராட்டத்தைத் தடுக்கின்றது.




- ❖ கடந்த 10 ஆண்டுகளில் பில்லியனர்களின் எண்ணிக்கை 2 மடங்காக அதிகரித்துள்ளது.
- ❖ 2017-2018 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு 2 நாட்களுக்கும் ஒரு புதிய கோடீஸ்வரர் உருவாக்கப்பட்டுள்ளனர்.
- ❖ இந்தியாவின் முன்னணி 1% பணக்காரர்கள் 39% அளவில் அதிக செல்வந்தராகியுள்ளனர். ஆனால் கீழ்நிலையில் உள்ள பாதிக்கும் மேலான மக்கள்தொகைக்கு வெறும் 3% அளவிலேயே செல்வம் அதிகரித்துள்ளது.
- ❖ இந்தியாவில் உள்ள பில்லியனர்களின் செல்வமானது கடந்த ஆண்டில் நாளொன்றுக்கு 2200 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளது.
- ❖ இந்தியாவின் முன்னணி பணக்காரர்களில் 10 சதவிகிதத்தினர் ஒட்டுமொத்த நாட்டின் வளத்தில் 77.4 சதவிகிதத்தைக் கொண்டுள்ளனர்.

# பொருளாதாரச் செய்திகள்

## தேசிய சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

- ❖ மத்திய அமைச்சரவையானது தேசிய சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை (GSTAT - Goods and Services Tax Appellate Tribunal) உருவாக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

### *GSTAT - சிறப்பம்சங்கள்*

- ❖ தேசிய சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது புது தில்லியில் அமையவிருக்கிறது.

- இது இந்த தீர்ப்பாயத்தின் தலைவரால் தலைமை தாங்கப்படும். மேலும் இந்த தீர்ப்பாயமானது ஒரு மத்திய தொழில்நுட்ப வல்லுநர் மற்றும் ஒரு மாநில தொழில்நுட்ப வல்லுநர் ஆகியோரைக் கொண்டிருக்கும்.








- இது சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான இரண்டாவது முறையீட்டு மன்றமாகும். மேலும் இது மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையே நிலவும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான முதலாவது பொது மன்றமாகும்.
- மத்திய மற்றும் மாநில சரக்கு மற்றும் சேவைகள் வரி சட்டத்தின்படி மேல்முறையீட்டு ஆணையங்களால் வழங்கப்படும் முதலாவது மேல்முறையீட்டுத் தீர்ப்பினை எதிர்த்து GSTAT-ல் மேல்முறையீடு செய்ய முடியும்.
- நாடெங்கிலும் GST செயல்படுத்தும் விதம் மற்றும் GST-ன் கீழ் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் சீர்மைத் தன்மையை GSTAT ஆனது உறுதி செய்யும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## பூமியின் பழமையான பாறை - நிலவு

- 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அப்பல்லோ 14 விண்கலத்தின் விண்வெளி வீரர்களால் எடுத்து வரப்பட்ட நிலவு மாதிரியிலிருந்து கண்டறியப்பட்ட நிலவின் பழமையான பாறையை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



- பூமியின் மேலடுக்கிலிருந்து 12.4 மைல்களுக்கு கீழாக அமைந்த இப்பாறையானது 4 மற்றும் 4.1 பில்லியன் வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் உருவானதாகும்.
- 2 கிராம் அளவுள்ள இப்பாறையின் மாதிரியானது பூமியில் பொதுவாகக் காணப்படுகின்ற மற்றும் பெரும்பாலும் நிலவில் காணப்படாத படிகக்கல், பெல்ட்ஸ்பர் மற்றும் ஸிர்கோன் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## பக்கே பகா ஹார்ன்பில் திருவிழா – மாநிலத் திருவிழா

- அருணாச்சலப் பிரதேச முதல்வர் பக்கே பகா ஹார்ன்பில் திருவிழாவை மாநிலத் திருவிழாவாக அறிவித்தார்.
- பக்கோ பகா ஹார்ன்பில் திருவிழாவானது (PPHF - Pakke Paga Hornbill Festival) அருணாச்சாலப் பிரதேசத்தின் ஒரே வளம் பேணல் திருவிழாவாகும்.
- மேலும் இவர் 2020 ஆம் ஆண்டு முதல் அருணாச்சலப் பிரதேச மாநில வனத் துறை இந்த திருவிழாவிற்கு நிதியளிக்கும் என்றும் கூறியுள்ளார்.
- பக்கே பகா ஹார்ன்பில் திருவிழாவானது முதன்முறையாக 2015 ஆம் ஆண்டில் கடைபிடிக்கப்பட்டது. பக்கே புலிகள் காப்பகத்தில் உள்ள ஹார்ன்பில் பறவைகளைப் பாதுகாக்கும் நியாசி பழங்குடியினரின் முயற்சியை அங்கீகரிப்பதற்காக இத்திருவிழா கொண்டாடப்படுகிறது.

# முக்கிய தினங்கள்

## தேசிய வாக்காளர்கள் தினம் 2019 - ஜனவரி 25

- தேர்தல் செயல்பாடுகளில் குடிமக்களின் பங்கேற்பை அதிகரிக்கச் செய்வதற்காக 2019 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி 9வது தேசிய வாக்காளர்கள் தினத்தை இந்தியா அனுசரித்தது.



- இந்த ஆண்டிற்கான தேசிய வாக்காளர்கள் தினத்தின் கருத்துருவானது, "எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுவிடாமல் அனைவரையும் உள்ளடக்குதல்" என்பதாகும்.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டதை நினைவு கூர்வதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நாடெங்கிலும் தேசிய வாக்காளர்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

\- - - - - - - - - - - - - -